# இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்




பதிப்பாசிரியர்: முனைவர் த.கீதாஞ்சலி

# எழுத்து
# சொல்
# பொருள்
# யாப்பு
# அணி

◆ அகத்தியம் ◆ தொல்காப்பியம் ◆ இறையனார் களவியல்/இறையனார் அகப்பொருள் ◆ புறப்பொருள் வெண்பாமாலை ◆ அவிநயம் ◆ காக்கை பாடினியம் ◆ சங்க யாப்பு ◆ சிறுகாக்கை பாடினியம் ◆ நற்றத்தம் ◆ பல்காயம் ◆ பன்னிரு படலம் ◆ மயேச்சுவரம் ◆ புறப்பொருள் வெண்பா மாலை ◆ இந்திரகாளியம் ◆ யாப்பருங்கலம் ◆ யாப்பருங்கலக் காரிகை ◆ அமுதசாகரம் ◆ வீரசோழியம் ◆ இந்திரகாளியம் ◆ தமிழ்நெறி விளக்கம் ◆ நேமிநாதம் ◆ சின்னூல் ◆ வெண்பாப் பாட்டியல் ◆ தண்டியலங்காரம் ◆ அகப்பொருள் விளக்கம் ◆ நன்னூல் ◆ நம்பி அகப்பொருள் ◆ களவியற் காரிகை ◆ பன்னிரு பாட்டியல் ◆ நவநீதப் பாட்டியல் ◆ வரையறுத்த பாட்டியல் ◆ சிதம்பரப் பாட்டியல் ◆ மாறனலங்காரம் ◆ மாறன் அகப்பொருள் ◆ பாப்பாவினம் ◆ பிரபந்த மரபியல் ◆ சிதம்பரச் செய்யுட்கோவை ◆ பிரயோக விவேகம் ◆ இலக்கண விளக்கம் ◆ இலக்கண விளக்கச் சூறாவளி ◆ இலக்கண கொத்து ◆ தொன்னூல் விளக்கம் ◆ பிரபந்த தீபிகை ◆ பிரபந்த தீபம் ◆ பிரபந்தத் திரட்டு ◆ இரத்தினச் சுருக்கம் ◆ உவமான சங்கிரகம் ◆ முத்து வீரியம் ◆ சாமிநாதம் ◆ சந்திரா லோகம் ◆ குவலயானந்தம் (மாணிக்கவாசகர்) ◆ குவலயானந்தம் (அப்பைய தீட்சிதர்) ◆ அறுவகை இலக்கணம் ◆ ஏழாம் இலக்கணம் ◆ ... பொருத்த விளக்கம் ◆ யாப்பொளி ◆ ... திரட்டு ◆ காக்கைபாடினியம் ◆ இலக்கண ... நுத்தப் பாவியல் ◆ வச்சனந்திமாலை

ISBN 938700960-2
9789387009608

இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்
(தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

பதிப்பாசிரியர்
முனைவர் த. கீதாஞ்சலி

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
மார்ச், 2020

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : xx + 280 = 300

விலை: ரூ. 300/-

ISBN : 978-93-87009-60-8

31. எண்வகை மெய்ப்பாடுகள்
அ. மகபுபூ 218

32. தமிழ் இலக்கண கருத்தொற்றுமைகளும் கற்பித்தலும்
முனைவர் பா. அருள்ஜோதி 228

33. தமிழ் இலக்கணம் கற்றலில் ஏற்படும்
சிக்கல்களும் தீர்வுகளும் 241
முனைவர் ந. ஜெயசுதா

34. மயங்கொலிச் சொற்களில் ஏற்படும்
சிக்கல்களும் தீர்வுகளும் 250
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா

35. தமிழலக்கண வரலாற்றில் வினா வெழுத்துக்கள்
முனைவர் ந. பிரகாஷ் 257

36. வினைத்தொகை கற்றல் கற்பித்தலில்
சிக்கல்களும் தீர்வுகளும் 263
முனைவர் த. பரமேசுவரி

37. தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும்
சிக்கல்களும் தீர்வுகளும் 275
வெ. பாரதி

# 36. வினைத்தொகை கற்றல் கற்பித்தலில் சிக்கல்களும் தீர்வுகளும்

முனைவர் த. பரமேசுவரி,
இணைப்பேராசிரியர் தலைவர்,
ந. க. ம. கல்லூரி,
பொள்ளாச்சி.

மனிதன் தோன்றிய ஆதிகாலத்தில் விலங்கோடு விலங்காக வாழ்ந்து வந்தவனுக்குத் தன் உணர்வுகளை வெளிப்படுத்தத் தெரிவிக்க எண்ணியதன் முயற்சி மொழியைக் கண்டுபிடித்தது. மொழி தோன்றாத பொழுது மெய்ப்பாடு, சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் மூலமாகப் பிறருக்கு உணர்த்தியிருந்தாலும் அது முழுமையுறவில்லை. அது கண்ணுக்குப் புலப்படு பொருள் என்பதளவில் மட்டுமே முடிந்தது. அக உணர்வுகளைப் புரியும்படி செய்யக் கண்டுபிடித்த கருவிதான் மொழி. உலகத்தில் மொழி ஒன்றே சிறந்த கண்டுபிடிப்பு: மற்றவை அனைத்தும் உருவாக்கப்பட்டதே ஆகும். எனவே, மொழி ஒரு கருவியே என்பது, "சரக்குகளை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச்செல்ல ஊர்திகள் பயன்படுவதைப்போன்று உள்ளத்தில் உதிக்கின்ற எண்ணங்களை, நினைவு அலைகளை, சிந்தனைகளைப் பிறருக்கு அளிக்கச் சுமந்து செல்லும் ஊர்தியே மொழியாகும். எனவே மொழி என்பது ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச் சொல்லுகின்ற ஓர் ஊர்தி எனலாம்.()இதையே ஒரு கருவி எனக்கூறலாம்"(நற்றமிழ் இலக்கணம், ப.2)என்ற கருத்திலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

உலக மொழிகளுள் இன்னும் அழியாத இடத்தைப் பெற்றுள்ள மொழிகள் பல உள்ளன. அதில் திராவிட மொழிகளும் ஆகும். "விந்திய மலைக்குத் தெற்கே உள்ள பகுதி திராவிட நாடு ஆகும். இப்பகுதியில் பேசப்பெற்ற மொழிகளைத் திராவிட மொழிகள்" என்றனர். இம்மொழிகளுக்குள் உறவு, தொடர்பு,

ஒற்றுமை ஆகியன இருக்கக் கண்டு மேனாட்டு மொழி அறிஞர் கால்டுவெல் இம்மொழிகளையெல்லாம் ஓரினத்துள் அடக்கி இவற்றைத் "திராவிட மொழியினம்" என்றார். 'தமிழ்' என்ற சொல்லிலிருந்துதான் 'திராவிடா' என்ற சொல் பிறந்தது என ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர் (தமிழ் - தமிழா - தமிலா - ட்ரமிலா - ட்ரமிடா - திரவிட - திராவிடா) மொத்த திராவிட மொழிகள் 22 ஆகும். கால்டுவெல் இலக்கியம், இலக்கணம் கொண்ட மொழிகளைத் திருந்திய மொழிகள் என்றும் இவை இல்லாதன மொழிகளைத் திருந்தாதன என்றும் பிரித்தார். திருந்திய மொழிகள்: தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, கொடகு. (நற்றமிழ் இலக்கணம், பக்.3,4)

திருந்திய மொழிகளுள் தமிழ் வளமான இலக்கியமும் செம்மையான இலக்கணமும் கொண்ட தொன்மையான தனித்தன்மையுள்ள சிறப்புமிக்க மொழியாகும். ஒரு மொழிக்கு இலக்கணம் அமையப்பெற வேண்டுமெனில் நிறைய இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும். இதை உற்று நோக்கும்பொழுது நமக்கு கிடைத்த முதல் இலக்கண நூல் தொல்காப்பியம்: இந்நூல் இரண்டாம் தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்தது, தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியத்திற்கு முன்னரே ஏராளமான இலக்கியங்கள் தமிழ்மொழியில் இருந்துள்ளன. அதனால்தான் ஒரு சிறந்த இலக்கண நூலை அவரால் வடிக்க முடிந்தது.

இலக்கியம், இலக்கணம் எழுதப்படும்பொழுது அவ்வாக்கால வழக்கில் உள்ள சொற்கள் பயன்பாடு இருக்கும். காலமாற்றத்தின் தாக்கம் கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கம் இவற்றில் மட்டும் மாறுபாடு ஏற்படாமல் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் உருவாகிறது. ஒரு காலத்தில் தோன்றிய இலக்கியம் இலக்கணம் கற்கும்பொழுதும், கற்பிக்கப்படும் பொழுதும் சில சிக்கல்கள் உருவாகிறது. குறிப்பாக இலக்கணம் கற்றல் கற்பித்தலில் ஏற்படும் நெருடல்கள் குழப்ப நிலைக்குக் கொண்டு செல்கிறது. தமிழ் மொழியே சிறப்பானது என்றாலும், சிறப்பானது எனும் சொல்லும்படியான தனித்துவங்கள் உள்ளன.

அவற்றுள் தொகைநிலைத்தொடர்கள், தொகாநிலைத்தொடர்கள் என்பன. இவைகள் தமிழ் மொழியின் சொல்வளத்தை மெய்ப்பிக்கும் முதன்மைச் சான்றாதாரங்கள். தொகைநிலைத் தொடர் வகைகளுள் ஒன்றான வினைத்தொகை கற்றல்-கற்பித்தல் சிக்கல்களை முன்வைத்து தீர்வுகள் பகரும் முகமாக ஒரு முன்னோட்டமாக இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்படுகிறது.

**வினைத்தொகை**

"வினையின் தொகுதி காலத் தியலும்" (எச்சவியல் நூ.409)

"காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை". (நன்-364)

**இளம்பூரணர் உரை**

வினைச் சொல் தொகுங்கால் காலத்தோன்றத் தொகும்.

காலத்தியலும் என்றது எக்காலமும் காலமுடையவாய் இயலும் என்றவாறு.

கொல்யானை என்பது கொன்றயானை, கொல்யானை, கொல்லா நின்றயான, கொல்யானை-கொல்லும்யானை என மூன்று காலத்திற்கும் அதுவே வாய்பாடு, பிறிதில்லை (தொல்காப்பியம் உரைவளம்.16)

**சேனாவரையர்**

காலத்தியலும் எனப் பொது வகையாற் கூறியவதனான் மூன்றும் காலமும் கொள்க.

தொகுக் காலத்திலும் எனவே, அவ்வினை பகிர்ந்து நின்ற வழித்தோன்றாது தொக்கவழித் தொகையாற்ற காலத்தோன்றும் என்றவாறாம்.

1. ஈண்டு வினையென்றது எவற்றையெனின், வினைச்சொற்கும் (உண் என்னும் முதல்நிலை(பகுதி) படியாக உண்டான், உண்டேன், உண்டாய் முதலிய வினைச்சொற்களும், உணல் எனும் தொழிற் பெயரும் தோன்றுதல் காண்க. பிறவுமன்ன..)

2. வினைப்பெயர்க்கும் முதல் நிலையாய் உண், தின், செல், கொல் வினைமாத்திரம் உணர்த்தி நிற்பனவற்றையென்பது. இவற்றை வடநூலார் 'தாது' என்ப.

வினைப்பெயர் என்றது தொழிற்பெயரை வினையாலனையும் பெயரையுமாம், வினைமாத்திரம் உணர்த்தும் பெயர் என்றது முதல் நிலையை வினைச்சொற்களின் முதல்நிலைகள் பெயர்களே என்பது சேனாவரையர் கருத்து.

உ.ம்:

ஆடரங்கு, செய்குன்று, புணர்பொழுது, அரிவாள், கொல்யானை, செல்செலவு (பக்:128,129).

தொ. சொல்- தெய்வச்சிலையம்

வினைத்தொகுதி காலத்தியலும்

வினைதொகுதியாமாறு உணர்த்துதேல் நுதலிற்று.

வினைத்தொகுதி காலச் சொல்லோடே நடக்கும்.

வினைச்சொல்லாவது தொழிலும், காலமும், பாலும் உணர்த்தலின் பாலுணர்த்தும் சொல் முற்றுச் சொல்லாகி நின்று தொகைநிலை யாகாமையாதும், காலம் காட்டாத வினையெச்சம், பெயரெச்சம் என்னும் இரண்டனுள்ளும் வினையெச்சம் முற்று வினைச்சொல்லோ டல்லது முடியாமையாதும் ஈண்டுத் தொகுவதும் வருவதும் பெயரெச்சம் என்று கொள்க. அது தொகுங்காலத்துக் காலப்பொருளையுணர்த்தும் சொல்லே தொகுவதும் வருவதும் என்று கொள்க. தொழிலும், பொருளும் விட்டிசைந்து நில்லாது ஒற்றுமைப்பட்டதனை வினைத்தொகை யென்றார்.

எ.கா.

கொல்லும் யானை, கொன்ற யானை, உண்ணும் நீர், உண்ட நீர், அரியும் வாள், அரிந்த வாள், செல்லும் இடம், சென்றவிடம், உண்ணும்பொழுது, உண்டபொழுது, கொல்லும் கொலை, கொன்ற கொலை என்றன.

கொல்யானை

உண்ணீர்

அரிவாள்

செல்லிடம்

உண்பொழுது

கொல்கொலை (ப.258,259)

தொ.சொல் (தெய்வச்சிலையம் தெய்வச்சிலையர். பதிப்பாசிரியர் - கோ. இளவழகன்)

நன்னூலார் உரை

வினைத்தொகை

"காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" (நூ.364)

காலங்காட்டும் வினையுருபுகளான இடைநிலை விகுதி முதலியன மறைந்து நின்ற பெயரெச்சங்கள் வினைத்தொகைகளாம்.

காலம் காட்டுவனவற்றைக் காலம் என்றது ஆகுபெயர். காலம் காட்டும் இடைநிலை, விகுதி முதலிய வினையுருபுகள் தொகும் எனவே முதனிலை மாத்திரம் தொகாது என்பது பெறப்படும்.

(எ.டு)

நேற்றுக் கொல்களிறு முன் விடு கணை - இறந்தகால வினைத்தொகை

இன்று கொல் களிறு இப்பொழுது விடுகணை - நிகழ்கால வினைத்தொகை

நாளைக் கொல் களிறு பின்விடு கணை - எதிர்கால வினைத்தொகை

இவை விரியுமிடத்துக் கொன்ற, கொல்கின்ற, கொல்லும் எனவும், விட்ட, விடுகின்ற, விடும் எனவும் விரியும் எனக் கொள்க.

கொல்களிறு, விடுகணை என்றாற் போல்வன, முக்காலமும் பற்றிவரின், முக்கால வினைத்தொகை எனப்படும்.

வருபுனல், தருசுடர் என வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வரும். (நன்னூல்.சொல் காண்டிகையுரை பேராசிரியர் சோம.இளவரசு)மேற்சொன்ன விளக்கங்களை

வைத்துப் பார்க்கும் பொழுது வினைத்தொகை என்பது

- சொற்றொடரின் முதற்சொல் வினையெச்சச் சொல்லின் பகுதி மட்டும் வந்திருப்பது (நடந்த - நடத்(ந்)த்அ) ஏதாவது பெயர்ச்சொல்லைக் கொண்டு பொருளை நிறைவு செய்வது.
- வினையெச்சச் சொல்லின் பகுதி காலத்தை உணர்த்தாது மூன்று காலத்திற்கும் பொருந்தியவாறு அமையும் என்பதும் ஆகும். குறிப்பு : பகுதி கட்டளைச் சொல்லாக இருக்கும்
- இதற்கு எடுத்துக்காட்டுக்கள் கற்பிக்கும் பழைய இலக்கண உரையாசியர்கள் கொல்களிறு, அலைகடல், ஆடரங்கு, அரிவாள் போன்றன.
- தற்போதைய இலக்கண உரையாசியர்கள் ஊறுகாய், சுடுமணல், சுடுசோறு இது போன்றவற்றை எடுத்துரைக் கிறார்கள்.

## முரண்படுதல்

வினை என்றால் செயல், 'செயல்' என்றாலே காலத்தோடு பொருந்தி வருவது. வினைத்தொகை என்பதில் இன்றியமைறாத கருத்து காலம் மறைந்து மூன்று காலத்திற்கும் பொருந்துவது எனும் இலக்கண விதிகளைப் பொருந்துமாறும், நேர்த்தியுடனும் கையாண்டிருக்கிறார்கள்.

அதாவது: 'அலைகடல்' - இதில் முதற்சொல் 'அலை' என்பதற்கு அகராதிகள் கூறும் பொருள் கீழ்க்கண்டவாறு,

1. கடல், கருமணல், குளம், திரை, பூமி, மது, மிகுதி (sea, black, sand, tank, screen, earth, liquor, excess)
2. "பல இடங்களில் சுற்றித்திரிதல் காற்றின் இயக்கம் காரணமாகப் பரந்து கிடக்கும் கடல் நீர்ப்பரப்பிலிருந்து கரையை நோக்கி உயர்ந்து உருண்டு பேரிரைச்சலோடு வரும் நீர், ஒருவரின்

பின்னால் சுற்றித்திரிதல், மனது அலைபாயுதல் (going all around in search of athing or a person; tossing about; wave; behind someone) "அலை ஓய்ந்து கடலாடல் ஆகுமா? அலைவாய்த் துரும்பு போல அமைவது - பழமொழிகள்" - (சுராவின் தமிழ் - தமிழ் - ஆங்கில அகராதி, ப.65)


மேற்கூறிய விளக்கங்களை உற்று நோக்கினால் 'திரிதல்' 'அலைதல்' எனும் பொருளே 'அலைகடல்' சொற்றொடருக்குப் பொருத்தமாக அமைகிறது. தொகை, தொகாநிலைத் தொடர்நிலைகளைப் பொருள் கொள்ளும்பொழுது இரண்டாவது சொல்லுக்கு ஏற்றவாறும், சொற்றொடர் முழுமைப்பொருளைத் தரும் வகையிலும் பொருள் கொள்ளவேண்டும்.

வினைத்தொகையைப் பொருள் கொள்ளும்பொழுது அந்த செயலானது எப்பொழுதும் நடந்துகொண்டே இருக்க வேண்டும்.


அதாவது :

பழைய உரையாசிரிகள் கையாண்ட மேற்கோள்:


1. அலைகடல்




2. எழு ஞாயிறு




3. கொல் களிறு





இவைகளுள் கடலில் 'அலை' எப்பொழுதுமே அலைந்து கொண்டே இருக்கும்(அலைகடல்), வானத்தில் சூரியன் உதிப்பது எல்லாக்காலத்தும் நிகழ்ந்து கொண்டே இருக்கும்(எழு ஞாயிறு), போர்க்களத்திற்குக் கொல்லும் தன்மையுள்ள களிறு மட்டுமே செல்லும். அதனால் எப்பொழுது சென்றாலும் கொல்லும் தன்மையது.(கொல் களிறு)

**தற்கால இலக்கண ஆசிரியர்கள் கையாண்ட மேற்கோள்:**


1. சுடுசோறு




2. சுடுநீர்





3. சுடுமணல்





4. ஊறுகாய்




2. சுடுநீர்




3. சுடுமணல்




4. ஊறுகாய்



இவைகள் அனைத்தும் தற்காலத்திற்கு ஏற்றவாறு விளக்கம் தரவேண்டும் என எழுதும் ஆசிரியர்கள். இவைகள் இலக்கண விதிகளுக்கு முரண்பட்டவை. 'சுடு' என்பதற்கு அகராதிகள் தரும் விளக்கம்:

1. 'சுடு' - சும்மாடு (cioth – pad used a caushion while carrying load on the head); (வி) : வெப்பம், வெயில் போன்றவற்றால் உஷ்ணமடைதல், உடல் காய்ச்சலால் அதிக வெப்பமடைதல், எரித்தல், சூடான கல்லில் இட்டு (அ) எண்ணெயில் பொரித்து (அ) நேரடியாக நெருப்பிட்டு வாட்டி உண்பதற்கு ஏற்ற வகையில் தயாரித்தல், (to get hot: to burn: to frly; to rost: to bake)

2. சுடுதல் : காய்தல், எரித்தல், பலகாரம் செய்தல், சூடுதல், அழித்தல், தீயிலிட்டு வாட்டுதல், வருத்துதல், (be hot; to frly; to rost;to injure as one's feelings)

3. சுடுசோறு (பெ) : புதிதாகச் சமைக்கப்பட்ட சாதம்(fresh, cooked rice)

4. "சுடு சோறு" எனும் எனும் சொற்றொடர் பழைய அகராதிகளில் இல்லை.

அரிசியை வேக வைத்தால் சோறு. அதை 'சுடு' எனும் சொல்லுடன் சேர்த்துச் சொல்லும் பொழுது, சொற்களின் பொருள் அடிப்படையில் சொற்றொடரின் பொருளே மாறுபடுகிறது. அப்பொழுது ஆக்கப்பட்ட (சமைக்கப்பட்ட) சோற்றத்தைத்தான் 'சுடுசோறு' என்பார்கள். சற்று நேரத்திற்கு மட்டுமே சோறு சூடாக இருக்கும். இதை முக்காலத்திற்கும் பொருந்திவராது. தற்காலத்திற்கு ஏற்றவாறு எடுத்துக்காட்டுகள் கற்பிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், காலத்திற்குப் பொருந்திய சொல் எனும் கூற்றைக் கருத்தில் கொண்டு மட்டுமே கற்பிக்கப்படுவதால் ஏற்படும் தவறாகும்.இது போலத்தான் 'சுடுமணல்' ஆகும்.

**'ஊறுகாய்' - அகராதிகள் தரும் விளக்கம்:**

- 'ஊறுகாய்' எனும் சொற்றொடர் பழைய அகராதிகளில் இல்லை.
- ஊறு - இடையூறு, புண், துன்பம், கொலை, உறுகை, பரிசம், வல்லூறு (கழக அகராதி ப.81)
- ஊறுதல் - கசிதல், நீருறுதல், செவ்வியுறுதல், சுரத்தல், உள் நிறங்கள், பெருகுதல்

  ஊறு - தொடு உணர்வு இடையூறு, புண், துன்பம், கொலை, உறுகை, பரிசம், காயம், நாசம், வல்லூறு (sensation of touch; obctacle; body; murder; wound; royal faction; ruin)

- 'ஊறுகாய்' - (பெ): உப்பு சேர்த்து ஊறவைக்கும் காய், அடைகாய் (Pickle) -(சுராவின் தமிழ் -தமிழ்- ஆங்கிலம் - ப.189)
- Pickle(n): salt solution,vinegar,in which vegetables and meat are preserved) - கறிகாய், மாமிசம் இவைகளைப் பாதுகாக்க உதவும் உப்புச்சாறு, காடி முதலியன. catables so preserved, ஊறுகாய் போடு (The little lifco dictionary p.no.264 – 265)
- preserve(v): keep in a sound state, பத்திரப்படுத்து(n) That which is preserved- ஊறுகாய், வற்றல் (மேலது ப. 277)

'ஊறுகாய்' - ஏற்கனவே ஊறவைக்கப்பட்டு பின்பு பக்குவப்படுத்தி சமைக்கும் காய். அப்படி இருக்க நடந்து முடிந்த செயல் எப்படி முக்காலத்திற்கும் பொருந்தும் சொல்லாக அமையும்? மேலும், நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது அகராதிகள் கூறும் பொருளை வைத்துப் பார்க்கும் பொழுது பொருள் பொருத்தமானதாகவும் இல்லை, 'ஊறு' எனும் சொல் கட்டளைச் சொல்லும் அன்று.

- வெறும் காலத்தை வைத்து மட்டும் பார்க்காமல் சொற்றொடரின் பொருள் மற்றும் வினைக்குரிய செயலோடும் பொருத்திப் பார்க்க வேண்டும். அந்த வினை (செயல்) மாறாமல் காலத்திற்கும் மாறுபடாத் தன்மையோடு நடந்து கொண்டே இருக்க வேண்டும்.

- ஒன்றைச் சிறப்புக் கருதியும் உயர்ந்த உள்ளத்தைக் காட்டும் வகையிலும் இருக்க வேண்டும் (உயர்மரம், திருவளர் செல்வன், திருநிறை செல்வி) இதுவே வலிந்து தான் சொல்லப்பட வேண்டும். ஏனெனில், வினைத்தொகை அமைந்த சொற்றொடரில் முதல் சொல் கட்டளை சொல்லாக இருக்கவேண்டும். கட்டளை என்பது உடனே ஒரு செயலைச் செய்வதற்காக கூறுவது. “வளர், உயர், நிறை, இதை எப்படி உடனே செய்யமுடியும்” இதையும் கவனத்தில் கொள்ள வேண்டியதும் ஆய்வுக்கு உட்படுத்துவதும் ஆகும்.

- தமிழ் மொழியின் சிறப்பே இடம், பொருள் ஏவலுக்கு ஏற்ப பயன்படுத்தப்படும் சொற்கள் தான். அதன் சிறப்பை உலகமே உணர்ந்து கற்கவும் கற்பிக்கவும் எழுதப்பட்டதே இலக்கணம். இதனை ஆசிரியர்கள் அதிகவனத்துடன் கற்பிக்க வேண்டும்.

- காலத்திற்கேற்ற இலக்கணம் எனும் புதுவகை மாற்றம் கருதி இலக்கண விதிகளை மீறுவது கூடாது. அதைச் சரிவரத் தெரிந்து கொண்டால் போதாது புரிந்து கொண்டு, உணர்ந்து கற்றலும் கற்பித்தலும் மொழி வளத்தைக் காக்கும்.